This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

சுராவின்

# கணக்குப்பதிவியல்

## 12ஆம் வகுப்பு

**2019 - 20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

### சிறப்பம்சங்கள் :

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
2. பொருத்துதல்
3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
4. பொருந்தாததை கண்டறிதல்
5. கூற்று மற்றும் காரணம்
6. சரியான கூற்றைக் கண்டறிதல்

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

www.surabooks.com

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

*2019-20 புதிய பதிப்பு*
© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-93-87385-73-3**
குறியீட்டு எண் : SG 196

**எழுதி வழங்கியவர்**
P.G. சத்யா ராதாகிருஷ்ணன் M.Com., M.Phil., MBA. நாகர்கோவில்
M. பரமேஸ்வரன் M.Com., M.Phil. திருச்சி
S. சந்தோஷ் குமார் M.Com., B.Ed. சென்னை

**திருத்தியவர்**
K. லலிதா கிருஷ்ணன் M.Com., B.Ed. மதுரை
R. கீதா M.Com. சென்னை

**மதிப்பாளர்**
Dr. M. ராமகிருஷ்ணன் M.Com., M.Phil., Ph.D. சென்னை

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-26161088, 26161099
**e-mail :** enquiry@surabooks.com
**website :** www.surabooks.com

**Our Guides for XI Standard**

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

# பதிப்பாசிரியர் உரை

12ம் வகுப்பிற்கான சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். **கணக்குப்பதிவியல்** பாடங்களுக்கான வினா விடைகள் /கணக்குகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

அரசு பொதுத் தேர்வுக்கான **புதிய மதிப்பீட்டு முறையில் 100 மதிப்பெண்கள் வடிவமைப்பில், 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வின் வினாத்தாள் அடிப்படையில்** நமது வழிகாட்டி உருவாக்கப்பட்டுள்ளதால், தேர்வுகளை மிகச் சரியான விதத்தில் எதிர்கொள்ளலாம்.

நமது சுராவின் **கணக்குப்பதிவியல்** வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், **கணக்குப்பதிவியல்** பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

*வாழ்த்துக்கள் !!!*

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 9600175757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **36550290536**<br>Bank Name : **STATE BANK OF INDIA**<br>Bank Branch : PADI<br>IFSC : SBIN0005083 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **21000210001240**<br>Bank Name : **UCO BANK**<br>Bank Branch : Anna Nagar West<br>IFSC : UCBA0002100 |
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **6502699356**<br>Bank Name : **INDIAN BANK**<br>Bank Branch : ASIAD COLONY<br>IFSC : IDIB000A098 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **1154135000017684**<br>Bank Name : **KVB BANK**<br>Bank Branch : Anna Nagar<br>IFSC : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
**email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-26162173, 26161099.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

# பொருளடக்கம்

| பாட எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள் | 1 – 32 |
| 2. | இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்குகள் | 33 – 66 |
| 3. | கூட்டாண்மை நிறுவனக் கணக்குகள் – அடிப்படைகள் | 67 – 94 |
| 4. | கூட்டாண்மை கணக்குகள் – நற்பெயர் | 95 – 112 |
| 5. | கூட்டாளி சேர்ப்பு | 113 – 146 |
| 6. | கூட்டாளி விலகல் மற்றும் கூட்டாளி இறப்பு | 147 – 180 |
| 7. | நிறுமக் கணக்குகள் | 181 – 218 |
| 8. | நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு | 219 – 244 |
| 9. | விகிதப் பகுப்பாய்வு | 245 – 274 |
| 10. | கணினி கணக்கியல் முறை | 275 – 284 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# அலகு 1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்

## பொருளடக்கம்


1.1 அறிமுகம்
1.2 முழுமை பெறா பதிவேடுகளின் பொருள்
1.3 முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள்
1.4 முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள்
1.5 இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்
1.6 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்
1.7 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறிதல்
1.7.1 நிலை அறிக்கை வாயிலாக இலாப அல்லது நட்டம் கண்டறிதல்
1.7.2 நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள்
1.7.3 நிலை அறிக்கை
1.7.4 நிலை அறிக்கையின் படிவம்
1.7.5 நிலை அறிக்கைக்கும் இருப்புநிலைக் குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள்
1.8 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்
1.8.1 முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய படி நிலைகள்


www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

# சுய ஆய்வு வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**1. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது**

(அ) நிறுமம்
(ஆ) அரசு
(இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்
(ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

[விடை. (இ) சிறிய அளவிலான தனிஆள் வணிகம்]

**2. நிலை அறிக்கை ஒரு**

(அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை
(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
(இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு
(ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

[விடை. (ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை]

**3. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது.**

(அ) தொடக்க முதல் கண்டறிய
(ஆ) இறுதி முதல் கண்டறிய
(இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய
(ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

[விடை. (அ) தொடக்க முதல் கண்டறிய]

**4. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்**

(அ) நட்டம் (ஆ) ரொக்கம்
(இ) முதல் (ஈ) இலாபம்

[விடை. (ஈ) இலாபம்]

**5. கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?**

(அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு
(ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு
(இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு
(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது

[விடை. (இ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரியமாற்றுச்சீட்டு]

**6. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது**

(அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு
(ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

[விடை. (அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு]

**7. முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?**

(அ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை
(ஆ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.
(இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
(ஈ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை.

[விடை. (இ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்]

**8. உரிமையாளரின் சொத்துகள் ₹85,000 மற்றும் பொறுப்புகள் ₹21,000 எனில் அவருடைய முதல்தொகை**

(அ) ₹85,000 (ஆ) ₹1,06,000
(இ) ₹21,000 (ஈ) ₹64,000

[விடை. (ஈ) ₹64,000]

**குறிப்பு :**

முதல் = சொத்துகள் – பொறுப்புகள்
= ₹85,000 – ₹21,000
= ₹64,000

**9. தொடக்க முதல் ₹10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹6,000, அவ்வாண்டின் இலாபம் ₹2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹3,000 எனில் இறுதி முதல் காணவும்.**

(அ) ₹9,000 (ஆ) ₹11,000
(இ) ₹21,000 (ஈ) ₹3,000

[விடை. (அ) ₹9,000]

**குறிப்பு :**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் | 9,000 |
| கூட்டுக : எடுப்புகள் | 6,000 |
| | 15,000 |



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



| | |
|---|---|
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 3,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 12,000 |
| **கழிக்க :** தொடக்க முதல் | 10,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 2,000 |

**10. கடனாளிகள் தொடக்க இருப்பு : ₹30,000, பெற்ற ரொக்கம் : ₹1,00,000, கடன் விற்பனை : ₹90,000; கடனாளிகள் இறுதி இருப்பு :?**

(அ) ₹30,000 (ஆ) ₹1,30,000
(இ) ₹40,000 (ஈ) ₹20,000

**[விடை. (ஈ) ₹20,000]**

**குறிப்பு :**

ப **மொத்தக் கடனாளிகள் க/கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 30,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 1,00,000 |
| கடன் விற்பனை | 90,000 | இருப்பு கீ/இ | 20,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

## II. மிகக் குறுகிய வினாக்கள் :

**1. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?**

விடை. (i) கணக்கேடுகள், இரட்டைப் பதிவு முறையின் படி பராமரிக்கப்படாத போது அந்த பதிவேடுகள் முழுமைபெறா கணக்கியல் பதிவேடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

(ii) பொதுவாக, ரொக்கக் கணக்கு மற்றும் ஆள்சார் கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

**2. இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.**

விடை. ரொக்கக் கணக்கு, ஆள்சார் கணக்குகளான வாடிக்கையாளர் மற்றும் கடனீந்தோர் கணக்கு மட்டுமே முழுமையாகவும், பிற கணக்குகள் தேவைக்கேற்பவும் பராமரிக்கப்படுகின்றன.

**3. நிலை அறிக்கை என்றால் என்ன?**

விடை. (i) நிலை அறிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக்காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.

(ii) சொத்துகளின் இருப்புகள் வலது பக்கமும் மற்றும் பொறுப்புகளின் இருப்புகள் இடது பக்கத்திலும் காண்பிக்கப்பெறும்.

(iii) மொத்தச் சொத்துகள் மற்றும் மொத்தப் பொறுப்புகளின் வேறுபாட்டுத் தொகை முதலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## III. குறுகிய வினாக்கள் :

**1. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?**

விடை. **முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகள் :**

**(i) தன்மை :**

இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும் இதில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரநிலைகள் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை.

**(ii) பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள் :**

பொதுவாக, ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. சில நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுவதே இல்லை.

**(iii) சீரற்றத் தன்மை :**

பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்றத் தன்மை காணப்படுகிறது. வெவேறு நிறுவனங்கள் தங்கள் தேவைகள் மற்றும் வசதிகளுக்கேற்ப நடவடிக்கைகளைப் பதிவு செய்கின்றன.

**(iv) பொருந்தும் தன்மை :**

கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பின்பற்ற சட்டப்படியான கடமையுள்ள நிறுவனங்கள் அல்லாத பிற நிறுவனங்கள் முழுமை பெறா பதிவேடுகளைப் பராமரிக்கலாம். எனவே, சிறு அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை கணக்குகள் இம்முறையில் பராமரிக்கலாம்.

**2. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?**

விடை. **முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் பின்வருமாறு :**

**(i) பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமை :**

இது ஒரு அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும். சொத்துக் கணக்குகள் மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை.

**(ii) இருப்பாய்வு தயாரிப்பது கடினம் :**

கணக்குகள், எல்லா விவரங்களுக்கும் பராமரிக்கப்படாததால் கணக்கேடுகள் முழுமையற்றதாக உள்ளன. எனவே, கணக்குகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை அறிந்துகொள்ள இருப்பாய்வினைத் தயாரிப்பது கடினம்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**(iii) வியாபாரத்தின் உண்மையான இலாபம் ஈட்டும் திறனை கண்டறிவது கடினம் :**

இலாபம், பெறப்படும் தகவல்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து கணக்கிடப்படுகிறது. எனவே, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாததால் உண்மையான இலாபத்தை கண்டறிவது கடினம்.

**(iv) வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிதல் கடினம் :**

பொதுவாக, முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீடுகள் மட்டுமே பெறப்படுகிறது. எனவே, ஒரு குறிப்பிட்ட நாளின் உண்மையான மற்றும் நேர்மையான நிதிநிலைத் தன்மை அல்லது நிதி நிலையை கண்டறிவது கடினமாக உள்ளது.

**(v) தவறுகள் மற்றும் மோசடிகள் எளிதாக கண்டறிய முடியாது :**

பதிவேடுகளின் ஒரு பகுதி மட்டுமே பெறப்படுவதால், கணக்கேடுகள் பராமரித்தலின் போது அகச்சோதனை செய்து தவறுகள் மற்றும் மோசடிகளைக் கண்டறிய முடியாமல் இருக்கலாம்.

**3. இரட்டைபதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

விடை.

| வ. எண். | வேறுபாட்டின் அடிப்படை | இரட்டைப்பதிவு முறை | முழுமைபெறா பதிவேடுகள் |
|---|---|---|---|
| 1. | நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப்படுகின்றன. | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுவதில்லை. |
| 2. | சரியான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல் | சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. | முழுமையானத் தகவல்கள் பெற முடியாததால் வியாபார மற்னுறும் இலாப நட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாது. எனவே. கண்டறிந்த இலாபம் அல்லது நட்டம் துல்லியமாக இருக்காது. |
| 3. | பொருந்தும் தன்மை | இது அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாகும். | இது சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பொருந்தலாம். |
| 4. | நம்பகத்தன்மை | இது, அறிவியல்பூர்வமான கணக்கியல் முறை மற்றும் சில கணக்கியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத் தன்மையுடையதாகும். | இது அறிவியல் தன்மையற்றதால் நம்பகத்தன்மை உடையதல்ல. |
| 5. | ஏற்புத்தன்மை | கணக்கியல் பதிவேடுகள் வரி அதிகாரிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையதாகும். | கணக்கியல் பதிவேடுகள் அனைத்துப் பயனாளர்களுக்கும் ஏற்புடையதல்ல. |

**4. நிலை அறிக்கை வாயிலாக இலாபம் அல்லது நட்டம் கண்டறியும் படிநிலைகளைத் தரவும்.**

விடை. நிலையறிக்கை தயாரித்து இலாபம் அல்லது நட்டம் கண்டறிவதற்கான படிநிலைகள் பின்வருமாறு :

(i) ஆண்டு தொடக்கத்தில் உள்ள சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இருப்புகளைக் கொண்டு தொடக்க நிலையறிக்கை தயாரித்து தொடக்க முதலைக் கண்டறியவும்.

(ii) கணக்காண்டின் இறுதியில் தேய்மானம், வாராக்கடன், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டி செலுத்திய செலவுகள், பெற வேண்டிய வருமானம், முதல் மீது வட்டி, எடுப்பு மீது வட்டி போன்றவற்றிற்குத் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்தபின் இறுதி நிலையறிக்கை தயாரித்து இறுதிமுதல் கண்டறியவும்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(iii) இறுதி முதலுடன் எடுப்புத் தொகையினை (பணம் மற்றும் பொருட்கள் இரண்டும்) கூட்டவும்.

(iv) சரிக்கட்டப்பட்ட இறுதிமுதலைக் கண்டறிய கூடுதல் முதலைக் கழிக்கவும்.

(v) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து தொடக்க முதலைக் கழித்து இலாபம் அல்லது நட்டத்தினைக் கண்டறியவும்.

(அ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலானது தொடக்க முதலை விட அதிகமானதாக இருந்தால், அது இலாபத்தைக் குறிக்கும்.

(ஆ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதலானது தொடக்க முதலை விட குறைவானதாக இருந்தால், அது நட்டத்தைக் குறிக்கும்.

**.......ல் முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| அவ்வாண்டின் இறுதிமுதல் | XXX |
| **கூட்டுக :** அவ்வாண்டின் எடுப்புகள் | XXX |
| | XXX |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | XXX |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | XXX |
| **கழிக்க :** தொடக்க முதல் | XXX |
| அவ்வாண்டின் இலாபம் அல்லது நட்டம் | XXX |

**5. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

விடை.

| வ. எண். | வேறுபாட்டிற்கான அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|---|
| 1. | நோக்கம் | நிலை அறிக்கை பொதுவாக வியாபாரத்தின் முதலை கண்டறிய தயாரிக்கப்படுகிறது. | இருப்புநிலைக் குறிப்பு வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப்படுகிறது. |
| 2. | கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. | கணக்குகள் இரட்டைப்பதிவு முறையில் பராமரிக்கப்படும் போது இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கப்படுகிறது. |
| 3. | தயாரிப்பின் அடிப்படை | இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. பேரேட்டுக் கணக்குகளின் இருப்புகள் முடிந்த இடங்களில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. | இது முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது. |
| 4. | நம்பகத்தன்மை | இது முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால் நம்பகத்தன்மை உடையது அல்ல. | இது இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால் நம்பகத்தன்மை உடையது. |
| 5. | விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால் விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால் விடுபட்ட விவரங்களை எளிதில் கண்டறிய முடியும். |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**6. முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கடன் விற்பனைத் தொகை எவ்வாறு கண்டறியப்படுகிறது.**

விடை. ரொக்க விற்பனையுடன் கடன் விற்பனையைக் கூட்டி நாம் மொத்த விற்பனையைப் பெறலாம். ரொக்க விற்பனை ரொக்க ஏட்டில் தரப்பட்டிருக்கும். மொத்தக் கடனாளிகள் கணக்கு தயாரிக்கப்பட்டு கடன் விற்பனை கணக்கிடப்படும் மொத்தக் கடனாளிகள் கணக்கின் மாதிரி படிவம் கீழே தரப்பட்டுள்ளது.

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | XXX | ரொக்கம் பெற்றது | XXX |
| கடன் விற்பனை (இருப்பு கட்டும் தொகை) | XXX | தள்ளுபடி அளித்தது | XXX |
| | | விற்பனைத் திருப்பம் | XXX |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | XXX |
| | XXX | | XXX |

**IV. பயிற்சி வினாக்கள் :**

**1. கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

**தீர்வு :**

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |
| | 9,20,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 8,00,000 |
| **கழிக்க :** தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 3,00,000 |

**2. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 2,20,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |

**தீர்வு :**

**2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் (2018, டிசம்பர் 31) | 1,80,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 50,000 |
| | 2,30,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 40,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 1,90,000 |
| **கழிக்க :** தொடக்க முதல் (2018, ஜனவரி 1) | 2,20,000 |
| அவ்வாண்டில் ஏற்பட்ட நட்டம் | 30,000 |

**3. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.4.2017 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 25,000 |

**தீர்வு :**

**2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் (31-3-2018) | 80,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| | 95,000 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



| விவரம் | ₹ |
|---|---|
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 30,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 65,000 |
| **கழிக்க :** 1.4.2017 அன்று தொடக்க முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 90,000 |
| 31.3.2018ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 25,000 |

**4. பின்வரும் தகவல்களிலிருந்து, 2018, டிசம்பர் 31ஆம் நாளைய முதல் கண்டறியவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 |
| உரிமையாளர் தனது சொந்த பயனுக்காக சரக்கு எடுத்தது | 30,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 15,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 60,000 |

**தீர்வு :**

**2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| இறுதி முதல் | 1,45,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டின் எடுப்புகள் (சொந்த பயனுக்கு சரக்கு எடுத்தது) | 30,000 |
| | 1,75,000 |

| விவரம் | ₹ |
|---|---|
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 15,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல் | 1,60,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 1,00,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 60,000 |

**5. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019, மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |

**தீர்வு :**

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| 2019, மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டில் எடுப்புகள் | 5,000 |
| | 55,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 7,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல் | 48,000 |
| **கழிக்க :** 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |

**6. 2019, மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 |
| அறைகலன் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டடம் | 3,00,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 3,20,000 | சரக்கிருப்பு | 2,20,000 |

2019, மார்ச் 31ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரிக்கவும் மற்றும் அந்நாளைய முதல் கண்டறியவும்.

**தீர்வு :**

**தாமஸ் என்பவரின் ஏடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளைய நிலை அறிக்கை**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | அறைகலன் | 80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 | நிலம் மற்றும் கட்டடம் | 3,00,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 2,80,000 | பற்பல கடனாளிகள் | 3,20,000 |
| | | கைரொக்கம் | 20,000 |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| | | சரக்கிருப்பு | 2,20,000 |
| | 10,00,000 | | 10,00,000 |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



7. **2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹40,000, அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**தீர்வு :**

**சுபா என்பவரின் 2019, மார்ச் 31ஆம் நாளைய நிலை அறிக்கை**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | கடனாளிகள் | 1,80,000 |
| கடனீந்தோர் | 90,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 | கணினி | 30,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 4,20,000 | இயந்திரம் | 3,00,000 |
| | | சரக்கிருப்பு | 1,60,000 |
| | | கைரொக்கம் | 60,000 |
| | 8,00,000 | | 8,00,000 |

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| 2019, மார்ச் 31 அன்று இறுதிமுதல் | 4,20,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| | 4,50,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 40,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல் | 4,10,000 |
| **கழிக்க :** 2018, ஏப்ரல் 1 அன்று தொடக்க முதல் | 1,20,000 |
| 31.3.2019ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம் | 2,90,000 |

8. **ராஜ்[6] முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.**

| விவரம் | 1.1.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**தீர்வு :**

**தொடக்க முதல் கணக்கிடுதல் :**

**ராஜூ என்பவரின் ஏடுகளில் 2018 ஜனவரி 1ஆம் நாளைய நிலை அறிக்கை**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | கைரொக்கம் | 80,000 |
| வங்கிக்கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | கடனாளிகள் | 90,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 2,50,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 5,20,000 | | 5,20,000 |

**இறுதிமுதல் கணக்கிடுதல் :**

**2018, டிசம்பர் 12ஆம் நாளைய நிலையறிக்கை**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,95,000 | கைரொக்கம் | 90,000 |
| வங்கிக் கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 45,000 | கடனாளிகள் | 2,00,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 3,00,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 6,00,000 | | 6,00,000 |

**2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாபநட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| 31.12.2018 அன்று இறுதிமுதல் | 3,00,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டின் எடுப்புகள் (2500 × 12) | 30,000 |
| | 3,30,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 50,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல் | 2,80,000 |
| **கழிக்க :** 1.1.2018 அன்று தொடக்க முதல் | 2,50,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 30,000 |

**9. ஆனந்த் தன் கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரித்து வருவதில்லை. 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.**

| விவரம் | 31.3.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| வங்கி ரொக்கம் | 5,000 (ப.) | 60,000 (வ.) |
| கைரொக்கம் | 3,000 | 4,500 |
| சரக்கிருப்பு | 35,000 | 45,000 |
| பற்பல கடனாளிகள் | 1,00,000 | 90,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 80,000 | 80,000 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 1,40,000 | 1,40,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,70,000 | 1,30,000 |

ஆனந்த் தனது சொந்த பயனுக்காக ₹60,000 எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக ₹17,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். பொறி மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**தீர்வு :**

**தொடக்க முதல் கணக்கிடுதல் :**

**ஆனந்த் என்பவரின் ஏடுகளில் 2018, மார்ச் 31ஆம் நாளைய நிலை அறிக்கை**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,70,000 | வங்கி ரொக்கம் | 5,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 1,93,000 | கைரொக்கம் | 3,000 |
| | | சரக்கிருப்பு | 35,000 |
| | | பற்பல கடனாளிகள் | 1,00,000 |
| | | பொறி மற்றும் இயந்திரம் | 80,000 |
| | | நிலம் மற்றும் கட்டடங்கள் | 1,40,000 |
| | 3,63,000 | | 3,63,000 |

**இறுதிமுதல் கணக்கிடுதல் :**

**2019, மார்ச் 31ஆம் நாளைய நிலை அறிக்கை**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 60,000 | கைரொக்கம் | | 4,500 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | சரக்கிருப்பு | | 45,000 |
| முதல் (இருப்புக்கட்டும் தொகை) | 1,57,000 | பற்பல கடனாளிகள் | 90,000 | |
| | | **கழிக்க :** கடனாளிகள் மீது 5% ஒதுக்கு | 4,500 | 85,500 |
| | | பொறி மற்றும் இயந்திரம் | 80,000 | |
| | | **கழிக்க :** தேய்மானம் 10% | 8,000 | 72,000 |
| | | நிலம் மற்றும் கட்டடங்கள் | | 1,40,000 |
| | 3,47,000 | | | 3,47,000 |

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2019 அன்று இறுதிமுதல் | 1,57,000 |
| **கூட்டுக :** அவ்வாண்டின் எடுப்புகள் | 60,000 |
| | 2,17,000 |
| **கழிக்க :** அவ்வாண்டில் கொண்டுவரப்பட்ட கூடுதல் முதல் | 17,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதிமுதல் | 2,00,000 |
| **கழிக்க :** 31.3.2018 அன்று தொடக்கமுதல் | 1,93,000 |
| 31.3.2019ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம் | 7,000 |

**10. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**தீர்வு :**

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 1,00,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 2,30,000 |
| விற்பனை க/கு (கடன்) | 2,80,000 | அளித்த தள்ளுபடி க/கு | 5,000 |
| (இருப்புக்கட்டும் தொகை) | | உள்திருப்பம் க/கு | 25,000 |
| | | இருப்பு கீ/இ | 1,20,000 |
| | 3,80,000 | | 3,80,000 |

**11. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக்கடன் | 15,000 |
| 2018, டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

**தீர்வு :**

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 1,30,000 | ரொக்கக் க/கு | 4,20,000 |
| விற்பனை க/கு (கடன்) | 5,40,000 | விற்பனைத் திருப்பம் க/கு | 35,000 |
| (இருப்புக்கட்டும் தொகை) | | வாராக்கடன் க/கு | 15,000 |
| | | இருப்பு கீ/இ | 2,00,000 |
| | 6,70,000 | | 6,70,000 |

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை
= ₹4,60,000 + ₹5,40,000
= ₹10,00,000

**12. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினைக் கணக்கிடவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,40,000 |
| ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 2,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது. | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 30,000 |

**தீர்வு :**

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 1,40,000 | ரொக்கக் க/கு | 3,90,000 |
| கடனாளிகள் க/கு | 4,80,000 | கடனாளிகள் க/கு | 30,000 |
| (அவ்வாண்டில் மாற்றுச்சீட்டு பெற்றது – இருப்புக்கட்டும் தொகை) | | (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | |
| | | இருப்பு கீ/இ | 2,00,000 |
| | 6,20,000 | | 6,20,000 |





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**13. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது. | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள் திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

**தீர்வு :**

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 60,000 | ரொக்கக் க/கு | 1,60,000 |
| கடனாளிகள் க/கு (அவ்வாண்டில் மாற்றுச்சீட்டு பெற்றது – இருப்புக்கட்டும் தொகை) | 2,05,000 | கடனாளிகள் க/கு (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | 15,000 |
| | | இருப்பு கீ/இ | 90,000 |
| | 2,65,000 | | 2,65,000 |

ப **மொத்த கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 2,50,000 | ரொக்கக் க/கு | 7,25,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மறுக்கப்பட்டது) | 15,000 | உள்திருப்பம் க/கு | 50,000 |
| விற்பனை க/கு (கடன்) (இருப்புக்கட்டும் தொகை) | 9,85,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது) | 2,05,000 |
| | | வாராக்கடன் | 30,000 |
| | | இருப்பு கீ/இ | 2,40,000 |
| | 12,50,000 | | 12,50,000 |

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

= ₹3,15,000 + ₹9,85,000

= ₹13,00,000

**14. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலை கணக்கிடவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| தொடக்க கடனீந்தோர் | 1,70,000 |
| கொள்முதல் திருப்பம் | 20,000 |
| கடனீந்தோருக்குச் செலுத்தியது | 4,50,000 |
| இறுதிக் கடனீந்தோர் | 1,90,000 |

www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**தீர்வு :**

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (அளித்தது) | 4,50,000 | இருப்பு கீ/கொ | 1,70,000 |
| கொள்முதல் திருப்பம் க/கு | 20,000 | கொள்முதல் க/கு (கடன்) (இருப்புக்கட்டும் தொகை) | 4,90,000 |
| இருப்பு கீ/இ | 1,90,000 | | |
| | 6,60,000 | | 6,60,000 |

**15. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018, ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 | ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 | 31.12.2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | 20,000 |

**தீர்வு :**

ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது) | 30,000 | இருப்பு கீ/கொ | 25,000 |
| இருப்பு கீ/இ | 20,000 | பற்பல கடனீந்தோர் க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது இருப்புக்கட்டும் தொகை) | 25,000 |
| | 50,000 | | 50,000 |

ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (செலுத்தியது) | 1,20,000 | இருப்பு கீ/கொ | 30,000 |
| கொள்முதல் திருப்பம் க/கு | 15,000 | கொள்முதல் க/கு (கடன்) (இருப்புக்கட்டும் தொகை) | 1,55,000 |
| செலுத்தற்குரிய மாற்றுசீட்டு க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது) | 25,000 | | |
| இருப்பு கீ/இ | 25,000 | | |
| | 1,85,000 | | 1,85,000 |

மொத்த கொள்முதல் = ரொக்க கொள்முதல் + கடன் கொள்முதல்
= ₹2,25,000 + ₹1,55,000
= ₹3,80,000

முழுமை பெறா பதிவேடுகளிலிருந்து கணக்குகள்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



16. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து மொத்த விற்பனை மற்றும் மொத்தக் கொள்முதல் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| **2018, ஏப்ரல் 1 அன்று இருப்புகள்** | | **2019, மார்ச் 31 அன்று இருப்புகள்** | |
| பற்பல கடனாளிகள் | 2,40,000 | பற்பல கடனாளிகள் | 2,20,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 | பற்பல கடனீந்தோர் | 1,50,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 8,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| **பிற தகவல்கள்** | ₹ | | ₹ |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 6,00,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 |
| வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி | 25,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 60,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,20,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 4,000 |
| சரக்களித்தோரால் அளிக்கப்பட்ட தள்ளுபடி | 10,000 | வாராக்கடன் | 16,000 |

**தீர்வு :**

ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 30,000 | ரொக்கக் க/கு | 60,000 |
| கடனாளிகள் க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது – இருப்புக்கட்டும் தொகை) | 42,000 | கடனாளிகள் க/கு (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | 4,000 |
| | | இருப்பு கீ/இ | 8,000 |
| | 72,000 | | 72,000 |

ப **மொத்தக் கடனாளிகள் க/கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 2,40,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 6,00,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மறுக்கப்பட்டது) | 4,000 | அளித்த தள்ளுபடி க/கு | 25,000 |
| விற்பனை க/கு (கடன்) (இருப்புக்கட்டும் தொகை) | 6,59,000 | வாராக்கடன் க/கு | 16,000 |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு பெற்றது) | 42,000 |
| | | இருப்பு கீ/இ | 2,20,000 |
| | 9,03,000 | | 9,03,000 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



ப **செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது) | 30,000 | இருப்பு கீ/கொ | 10,000 |
| இருப்பு கீ/இ | 20,000 | பற்பல கடனீந்தோர் க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது – இருப்புக்கட்டும் தொகை) | 40,000 |
| | 50,000 | | 50,000 |

ப **மொத்தக் கடனீந்தோர் க/கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்கக் க/கு (செலுத்தியது) | 3,20,000 | இருப்பு கீ/கொ | 1,20,000 |
| பெற்ற தள்ளுபடி க/கு | 10,000 | கொள்முதல் க/கு (கடன்) (இருப்புக்கட்டும் தொகை) | 4,00,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு க/கு (மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது) | 40,000 | | |
| இருப்பு கீ/இ | 1,50,000 | | |
| | 5,20,000 | | 5,20,000 |

**17. இராகேஷ் என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.**

| விவரம் | 31.3.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| பற்பல கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |

**பிற தகவல்கள் :**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வாடகை செலுத்தியது | 1,20,000 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| பெற்ற தள்ளுபடி | 35,000 | எடுப்புகள் | 1,00,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 | ரொக்க விற்பனை | 20,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 11,00,000 | 1.4.2018 அன்று முதல் | 5,20,000 |

**தீர்வு :**

ப **மொத்தக் கடனாளிகள் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 5,30,000 | ரொக்கக் க/கு (பெற்றது) | 12,50,000 |
| விற்பனை க/கு (கடன்) (இருப்புக்கட்டும் தொகை) | 13,85,000 | அளித்த தள்ளுபடி க/கு | 25,000 |
| | | இருப்பு கீ/இ | 6,40,000 |
| | 19,15,000 | | 19,15,000 |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



ப **மொத்தக் கடனீந்தோர் கணக்கு** வ

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
**(ii)** அறக்கொடை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பண்பாட்டு மன்றங்கள், விளையாட்டு மற்றும் மனமகிழ் மன்றங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள் மற்றும் இலக்கிய அமைப்புகள் போன்றவை இலாப நோக்கற்ற அமைப்புகளுக்கு உதாரணங்கள் ஆகும்.

**2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?**

விடை. **(i)** பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

**(ii)** பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது.

**3. உயில்கொடை என்றால் என்ன?**

விடை. ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும். இது ஒரு முதலின வரவாகும்.

**4. ஆயுள் உறுப்பினர் கட்டணம் – சிறு குறிப்பு தரவும்.**

விடை. உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும். ஏனெனில், இது திரும்பத் திரும்ப நிகழாத் தன்மை கொண்டது.

**5. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**

விடை. 1. ஆயுள் உறுப்பினர் கட்டணம்
2. உயில்கொடை
3. அறக்கட்டளை நிதி
4. முதலீடுகள் விற்ற தொகை

**6. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.**

விடை. 1. நுழைவுக்கட்டணம்
2. பொது நன்கொடைகள்
3. பங்காதாயம்
4. வாடகைப் பெற்றது

## III. குறுகிய வினாக்கள் :

**1. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?**

விடை. **(i)** வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது இலாப நோக்கற்ற அமைப்புகளில் கணக்காண்டின் இறுதியில் தயாரிக்கப்படும் வருவாய் மற்றும் செலவுகளின் தொகுப்பாகும். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உபரி அல்லது பற்றாக்குறையை கண்டறிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

**(ii)** இது ஒரு பெயரளவு கணக்கு ஆகும். இது இலாப நட்டக் கணக்கு தயாரிப்பது போன்றதாகும். இந்த கணக்கில் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும், செலவுகள் பற்றுப்பக்கத்திலும் காண்பிக்கப்படும்.

**(iii)** ரொக்க நடவடிக்கைகள் மட்டுமின்றி ரொக்கம் சாரா நடவடிக்கைகளான ஈட்டிய வருமானம் பெறப்படாதது, நிலைச் சொத்து விற்பனை மீதான நட்டம் அல்லது இலாபம், தேய்மானம் போன்றவைகளும் இதில் பதிவு செய்யப்படுகின்றன.

**2. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

விடை.

| வ. எண். | அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|---|
| 1. | நோக்கம் | இது ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்களை அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது. | இது நடப்பு ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) அல்லது வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் (பற்றாக்குறை) குறித்து அறிந்துகொள்ள தயாரிக்கப்படுகிறது. |
| 2. | கணக்கின் தன்மை | இது ஒரு சொத்துக் கணக்காகும். இது ரொக்கக் கணக்கின் தொகுப்பாகும். அனைத்து ரொக்கப் பெறுதல்கள் பற்றுப் பக்கத்திலும், ரொக்கச் செலுத்தல்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. | இது ஒரு பெயரளவுக் கணக்காகும். இது இலாப நட்டக் கணக்கைப் போன்றது. செலவுகள் பற்றுப்பக்கத்திலும் மற்றும் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படுகின்றன. |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



| | | | |
|---|---|---|---|
| 3. | கணக்கியலின் அடிப்படை | இது ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சார்பற்ற விவரங்கள் பதியப்படுவதில்லை. | இது நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது. ரொக்கம் சாரா விவரங்களான கொடுபட வேண்டிய செலவுகள், தேய்மானம் போன்றவைகளும் இங்கு பதியப்படும். |
| 4. | தொடக்க மற்றும் இறுதி இருப்பு | இது ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் தொடக்க இருப்புடன் தொடங்கி, ரொக்கம் மற்றும் வங்கிக் கணக்கின் இறுதி இருப்புடன் முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது. |
| 5. | நடவடிக்கையின் தன்மைகள் | இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடில்லாமல் அனைத்துப் பெறுதல்கள் மற்றம் செலுத்தல்களைக் கொண்டிருக்கும் | இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே, அதாவது வருவாயினச் செலவுகள் மற்றும் வருவாயின வரவுகளை மட்டுமே கொண்டிருக்கும். |

**3. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?**

விடை. இலாப நோக்கற்ற அமைப்புகளின் இறுதி கணக்குகளில் சந்தாவிற்கான செயல்முறைகள் :

**(அ) வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் செயல்முறைகள் :**

நடப்பு ஆண்டு, முந்தைய ஆண்டு, அடுத்த ஆண்டிற்கான சந்தா பெற்றது தனித்தனியாக கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பு ஆண்டிற்குரிய சந்தா கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களை செய்த பின்பு வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காண்பிக்கப்பெறும்.

(i) நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா கூட்டப்படவேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற நடப்பாண்டிற்குரிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா கொடுக்கப்பட்டிருந்தால், நடப்பாண்டில் பெற்ற மொத்த சந்தா பின்வரும் சரிக்கட்டுதல்களை செய்த பின்னர் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப் பக்கத்தில் காட்டப்பெறும்.

(i) முந்தைய ஆண்டுக்குரிய பெற வேண்டிய சந்தா நடப்பு ஆண்டில் பெறப்பட்டிருந்தால் கழிக்கப்பட வேண்டும். நடப்பாண்டிற்குரிய பெறவேண்டிய சந்தா கூட்டப்பட வேண்டும்.

(ii) முந்தைய ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற சந்தாவில் நடப்பாண்டிற்கு உரியது கூட்டப்பட வேண்டும். நடப்பாண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தாவில் எதிர்வரும் ஆண்டிற்குரியது கழிக்கப்பட வேண்டும்.

**(ஆ) இருப்புநிலைக் குறிப்பில் செயல்முறைகள்:**

(i) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா மற்றும் இன்னும் பெற வேண்டிய முந்தைய ஆண்டிற்குரிய சந்தா போன்றவை அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

(ii) நடப்பு ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா அவ்வாண்டின் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

**4. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதி கணக்குகளில் பின்வரும் விவரங்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன?**

**(அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை**

**(ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம்**

**(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி**

விடை. **(அ) விளையாட்டுப் பொருள்கள் விற்பனை :**

(i) நடப்பாண்டில் பயன்படுத்தப்பட்ட விளையாட்டுச் சாதனங்கள் வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப் பக்கத்தில் காட்டப்பட வேண்டும்.

(ii) பயன்படுத்தப்பட்டவை = தொடக்க இருப்பு + நடப்பு ஆண்டில் வாங்கியது – இறுதி இருப்பு



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(iii) இறுதி சரக்கிருப்பு அவ்வாண்டின் இறுதியில் இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் தோன்றும்.

(iv) பழைய விளையாட்டுச் சாதனங்கள் ஏதேனும் விற்பனைச் செய்யப்பட்டிருந்தால் அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் வரவுப்பக்கத்தில் காட்டப்பட வேண்டும் அல்லது வருவாய் மற்றும் செலவினக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் குறிப்பிட்ட பயன்படுத்தப்பட்ட பொருள்களில் கழித்துக் காட்டப்பட வேண்டும்.

**(ஆ) ஆயுள் உறுப்பினர் கட்டணம் :**

உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் ஒரு முதலின வரவாகும்.

**(இ) தொடர் விளையாட்டுப் போட்டி நிதி :**

தொடர் விளையாட்டுப் போட்டி நிதி இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் தனியாக காண்பிக்கப்பட வேண்டும். நிதிக்கான வருமானம் ஏதாவது இருந்தால் அவை நிதிக் கணக்குடன் கூட்டப்பட வேண்டும் மற்றும் நிதித் தொடர்பான செலவுகள் இருப்புநிலைக் குறிப்பில் நிதிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட வேண்டும்.

## IV. பயிற்சி வினாக்கள் :

**1. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3.000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

**தீர்வு :**

**குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ கைரொக்கம் | 4,000 | சம்பளம் கொடுத்தது | 3,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 10,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| | | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 10,500 |
| சந்தா பெற்றது | 15,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |
| வாடகை பெற்றது | 2,000 | இருப்பு கீ/இ கைரொக்கம் | 5,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 | | |
| தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 | | |
| | 46,000 | | 46,000 |




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



2. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கைரொக்கம் (1.4.2018) | | 1,000 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பிற்காக கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| சந்தா பெற்றது : முந்தைய ஆண்டு | 500 | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | உயில்கொடைப் பெற்றது | 2,000 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| கடன்மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | 2,000 |

தீர்வு :

**கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | இருப்பு கீ/கொ | |
| கைரொக்கம் | | 1,000 | வங்கி மேல்வரைப்பற்று | 6,000 |
| சந்தா பெற்றது : | | | கூலி செலுத்தியது | 2,000 |
| முந்தைய ஆண்டு | 500 | | கடன் மீது வட்டி செலுத்தியது | 2,000 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 5,200 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| உயில் கொடைப் பெற்றது | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 1,900 |
| அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | | 2,000 | இருப்பு கீ/இ | |
| | | | ரொக்க இருப்பு | 300 |
| | | | வங்கி இருப்பு | 2,400 |
| | | 20,700 | | 20,700 |

[குறிப்பு : செலுத்த வேண்டிய கூலி என்பது ரொக்கம் சாரா நடவடிக்கை ஆகையால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை.]

3. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் 2018, டிசம்பர், 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.1.2018) | 2,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| வங்கி இருப்பு (1.1.2018) | 3,000 | சந்தா பெற்றது | 8,500 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 500 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| எழுதுபொருள்கள் வாங்கியது | 6,000 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 | அறைகலன் மீதான தேய்மானம் | 900 |
| நுழைவுக்கட்டணம் பெற்றது | 3,000 | ரொக்க இருப்பு (31.12.2018) | 2,500 |
| பல்வகைச் செலவுகள் | 6,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| உதவித்தொகை அளித்தது | 2,000 | அறைகலன் விற்றது | 4,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 2,000 | | |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**தீர்வு :**

**மதுரை அன்னை தெரசா மகளிர் மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | எழுது பொருள்கள் வாங்கியது | 6,000 |
| ரொக்க இருப்பு | 2,000 | | தணிக்கைக் கட்டணம் செலுத்தியது | 2,000 |
| வங்கி இருப்பு | 3,000 | 5,000 | பல்வகைச் செலவுகள் | 6,000 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | | 500 | உதவித்தொகை அளித்தது | 2,000 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | | 3,000 | தீக்காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 1,500 |
| முதலீடுகள் மீதான வட்டி | | 2,000 | அறைகலன் வாங்கியது | 6,000 |
| சந்தா பெற்றது | | 8,500 | செய்தித்தாள்கள் வாங்கியது | 700 |
| அறைகலன் விற்றது | | 4,000 | போக்குவரத்துச் செலவுகள் | 1,000 |
| இருப்பு கீ/இ | | | இருப்பு கீ/இ | |
| வங்கி மேல்வரைப்பற்று | | 4,700 | ரொக்க இருப்பு | 2,500 |
| | | 27,700 | | 27,700 |

[**குறிப்பு :** அறைகலன் மீதான தேய்மானம் ரொக்கம் சாரா நடவடிக்கையாக இருப்பதால் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் வருவதில்லை.]

**4. மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15,000 | காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது | 12,000 |
| தொடக்க வங்கி இருப்பு | 25,000 | மன்ற ஆண்டு விழாச் செலவுகள் | 15,000 |
| நன்கொடைகள் பெற்றது | 48,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| பழைய உபகரணங்கள் விற்றது | 26,000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13,500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | 18,000 | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 3,000 |
| டென்னிஸ் மைதான கட்டுமானச் செலவுகள் | 7,000 | முதலீடுகள் விற்றது | 12,000 |
| அறக்கொடை நாடகக்காட்சி வசூல் | 4,000 | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |
| வாடகைச் செலுத்தியது | 1,000 | | |

**தீர்வு :**

**மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 |
| ரொக்க இருப்பு | 15,000 | | கட்டுமானச் செலவுகள் | 7,000 |
| வங்கி இருப்பு | 25,000 | 40,000 | வாடகைச் செலுத்தியது | 1,000 |
| நன்கொடைகள் பெற்றது | | 48,000 | காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது | 12,000 |
| பழைய உபகரணங்கள் விற்றது | | 26,000 | மன்ற ஆண்டுவிழாச் செலவுகள் | 15,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | | 18,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| அறக்கொடை நாடகக்காட்சி வசூல் | | 4,000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13,500 |
| முதலீடுகள் விற்றது | | 12,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| | | | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 3,000 |
| | | | இருப்பு கீ/இ | |
| | | | ரொக்க இருப்பு | 12,000 |
| | | | வங்கி இருப்பு | 50,000 |
| | | 1,48,000 | | 1,48,000 |

**5. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வட்டி மற்றும் வங்கி கட்டணம் | 250 |
| வங்கி மேல்வரைப்பற்று இருப்பு (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதானம் பராமரிப்பு | 550 |
| பயணச் செலவுகள் | 1,800 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | 2,800 |
| பொதுச் செலவுகள் | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| தூது அஞ்சல் செலவுகள் | 2,000 | மின்கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக்க இருப்பு (31.3.2019) | 1,750 |

**தீர்வு :**

**கடலூர் கபடி மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | இருப்பு கீ/கொ | |
| ரொக்க இருப்பு | 11,000 | வங்கி மேல்வரைப்பற்று | 20,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | எழுது பொருள் வாங்கியது | 5,200 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | பயணச் செலவுகள் | 1,800 |
| இதர வருமானம் | 350 | பொதுச் செலவுகள் | 500 |
| அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 | தூது அஞ்சல் செலவுகள் | 2,000 |
| அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 | நகராட்சி வரி செலுத்தியது | 3,000 |
| இருப்பு கீ/இ | | வட்டி மற்றும் வங்கிக் கட்டணம் | 250 |
| வங்கி மேல்வரைப்பற்று | 4,500 | மைதானம் பராமரிப்பு | 550 |
| | | தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | 2,800 |
| | | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| | | மின்கட்டணம் செலுத்தியது | 5,000 |
| | | இருப்பு கீ/இ | |
| | | ரொக்கம் | 1,750 |
| | 44,850 | | 44,850 |

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**6. கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.**

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கைரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டி பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில்கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது | 16,000 | இருப்பு கீ/இ | |
| (ஏட்டு மதிப்பு ₹17,000) | | கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

**தீர்வு :**

**தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் எடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|
| வாடகை | 24,000 | வட்டிப் பெற்றது | 5,000 |
| சம்பளம் | 20,000 | சந்தா | 55,000 |
| பயணச்செலவுகள் | 2,000 | நுழைவுக் கட்டணம் | 7,000 |
| அச்சு மற்றும் எழுது பொருள் | 6,000 | | |
| அறைகலன் விற்பனை மீதான நட்டம் | 1,000 | | |
| உபரி (செலவுகளைக்காட்டிலும் மிகுதியான வருமானம்) | 14,000 | | |
| | 67,000 | | 67,000 |

**7. கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.**

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான வாடகை செலுத்தியது | | 12,000 |
| கைரொக்கம் | 23,000 | | அச்சுக் கட்டணம் | | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | 35,000 | வங்கிக் கட்டணம் | | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | | 6,000 | கட்டடம் மீதான காப்பீடு | | 2,000 |
| சந்தா பெற்றது | | 9,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 16,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 7,000 | தணிக்கைக் கட்டணம் | | 3,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | | 2,000 | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | | |
| | | | கைரொக்கம் | 2,000 | |
| | | | வங்கி ரொக்கம் | 14,000 | 16,000 |
| | | 59,000 | | | 59,000 |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**தீர்வு :**

**கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் ஏடுகளில் 2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|
| மைதான வாடகை செலுத்தியது | 12,000 | அரங்க வாடகை பெற்றது | 6,000 |
| அச்சுக்கட்டணம் | 5,000 | சந்தா பெற்றது | 9,000 |
| வங்கிக் கட்டணம் | 1,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 2,000 |
| கட்டடம் மீதான காப்பீடு | 2,000 | பற்றாக்குறை (வருமானத்தைக்காட்டிலும் மிகுதியான செலவுகள்) | 26,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 16,000 | | |
| தணிக்கைக் கட்டணம் | 3,000 | | |
| விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | 4,000 | | |
| | 43,000 | | 43,000 |

8. **கீழ்க்காணும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கூடுதல் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தாத் தொகையினைக் கணக்கிடவும்.**

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017 | 28,000 | | | |
| 2018 | 1,72,000 | | | |
| 2019 | 12,000 | 2,12,000 | | |

**கூடுதல் தகவல்கள் :** 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹8,000.

**தீர்வு :**

**2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| | | சந்தா பெற்றது | 1,72,000 | |
| | | **கூட்டுக :** 2018ல் பெறவேண்டிய சந்தா | 8,000 | 1,80,000 |

9. **பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.**

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய பெறுதல்கள் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017 - 2018 | 10,000 | | | |
| 2018 - 2019 | 50,000 | | | |
| 2019 - 2020 | 5,000 | 65,000 | | |

மன்றத்தில் உள்ள 200 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தாவாக ₹400 செலுத்துகின்றனர். 2017-2018 ஆம் ஆண்டில் இன்னும் பெற வேண்டிய சந்தா ₹2000.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



தீர்வு :

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| | | சந்தா | 50,000 | |
| | | **கூட்டுக :** 2017 – 2018 ல் பெறவேண்டிய சந்தா | 30,000 | 80,000 |

| | | ₹ |
|---|---|---|
| **குறிப்பு :** நடப்பாண்டிற்குரிய மொத்த சந்தா (2018 – 19) (200 × 400) | = | 80,000 |
| **கழிக்க :** நடப்பாண்டில் பெற்ற தொகை (2018 – 19) | = | 50,000 |
| நடப்பாண்டில் பெற வேண்டிய தொகை | = | 30,000 |

**2019, மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| முன்கூட்டிப்பெற்ற 2019 – 20ஆம் ஆண்டிற்கான சந்தா | 5,000 | பெறவேண்டிய சந்தா | | |
| | | 2017 – 2018 | 2,000 | |
| | | 2018 – 2019 | 30,000 | 32,000 |

**10. பின்வரும் விவரங்கள் ஒரு மன்றத்தின் 2017, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும். அந்த மன்றம் 2016–2017ஆம் ஆண்டில் பெற்ற சந்தா : ₹40,000. இதில் 2015–2016ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹5,000 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹3,000 உள்ளடங்கியுள்ளது. 2016–2017ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹1,000 இன்னும் பெற வேண்டியுள்ளது.**

தீர்வு :

**2017, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| | | சந்தா | 40,000 | |
| | | **கழிக்க :** 2015 – 2016ஆம் ஆண்டுக்கான சந்தா | 5,000 | |
| | | | 35,000 | |
| | | **கழிக்க :** 2017 – 18ஆம் ஆண்டுக்கான சந்தா | 3,000 | |
| | | | 32,000 | |
| | | **கூட்டுக :** 2016 – 17ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது | 1,000 | 33,000 |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**2017, மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| 2017 - 2018ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது | 3,000 | 2016 - 2017ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது | 1,000 |

**11. ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.**

| விவரம் | 1.1.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| சந்தா பெறவேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

2018ஆம் ஆண்டில் சந்தா பெற்றது : ₹45,000

**தீர்வு :**

ப **2018ஆம் ஆண்டுக்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்** வ

| விவரம் | ₹ | ₹ |
|---|---|---|
| 2018ஆம் ஆண்டில் பெற்ற சந்தா | | 45,000 |
| **கூட்டுக :** 2018ஆம் ஆண்டிற்கான சந்தா 2017-ல் பெற்றது | 4,000 | |
| 2018ஆம் ஆண்டிற்கான சந்தா பெற வேண்டியது | 5,000 | 9,000 |
| | | 54,000 |
| **கழிக்க :** 2017-ல் பெற வேண்டிய சந்தா | 3,000 | |
| 2018-ல் முன்கூட்டிப்பெற்ற சந்தா | 7,000 | 10,000 |
| 2018ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம் | | 44,000 |

**12. பின்வரும் விவரங்கள் 2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.**

**2018ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹50,000. இதில் 2017ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹5,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹7,000 உள்ளடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹6,000. 2017ஆம் ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற 2018ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹4,000.**

**தீர்வு :**

ப **2018, டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு** வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| | | நடப்பாண்டில் பெற்ற சந்தா | 50,000 | |
| | | **கழிக்க :** 2017ஆம் ஆண்டுக்கான சந்தா பெற்றது | 5,000 | |
| | | | 45,000 | |
| | | **கழிக்க :** 2019ஆம் ஆண்டுக்கான சந்தா பெற்றது | 7,000 | |
| | | | 38,000 | |
| | | **கூட்டுக :** 2018ஆம் ஆண்டு பெற வேண்டிய சந்தா | 6,000 | |
| | | | 44,000 | |
| | | **கூட்டுக :** 2018ஆம் ஆண்டிற்கான சந்தா 2017ஆம் ஆண்டில் முன்கூட்டிப் பெற்றது | 4,000 | 48,000 |


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



13. பின்வரும் விவரங்கள் தூத்துக்குடி இளம் முன்னோடிகள் சங்கத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

சங்கத்தில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ₹25 ஆண்டுச் சந்தாவாக செலுத்துகின்றனர். ஆண்டிறுதியில் 10 உறுப்பினர்கள் சந்தா செலுத்தாமல் இருந்தனர். ஆனால் நான்கு உறுப்பினர்கள் அடுத்த ஆண்டிற்கான சந்தா தொகையை முன்கூட்டிச் செலுத்தி இருந்தனர்.

**தீர்வு :**

ப **வருவாய் மற்றும் செலவினக் கணக்கு** வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|
| | | சந்தா (₹25 × 100) | 2,500 |

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| முன்கூட்டிப்பெற்ற சந்தா (₹25 × 4) | 100 | பெறவேண்டிய சந்தா (₹25 × 10) | 250 |

14. பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 16,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | 84,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 10,000 |

**தீர்வு :**

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|---|
| பயன்படுத்தப்பட்ட விளையாட்டுப் பொருள்கள் : | | | | |
| தொடக்க இருப்பு | 16,000 | | | |
| **கூட்டுக :** நடப்பாண்டு வாங்கியது | 84,000 | | | |
| | 1,00,000 | | | |
| **கழிக்க :** இறுதி இருப்பு | 10,000 | 90,000 | | |

**2019, மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| | | விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | 10,000 |

15. பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மனற்த்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | 17,000 |
| பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | 2,000 |
| மட்டைகள் மற்றம் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



தீர்வு :

ப **வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் ஏடுகளில் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு** வ

| செலவுகள் | ₹ | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் பயன்படுத்தியது : | | | பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | 2,000 |
| தொடக்க இருப்பு | 3,000 | | | |
| **கூட்டுக :** கொள்முதல் | 17,000 | | | |
| | 20,000 | | | |
| **கழிக்க :** இறுதி இருப்பு | 4,000 | 16,000 | | |

**வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| | | மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |

**16. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.**

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | 6,500 |
| 31.3.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,200 |

தீர்வு :

ப **சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு** வ

| செலவுகள் | ₹ | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|---|
| எழுது பொருள்கள் பயன்படுத்தியது : | | | | |
| தொடக்க இருப்பு | 2,600 | | | |
| **கூட்டுக :** கொள்முதல் | 6,500 | | | |
| | 9,100 | | | |
| **கழிக்க :** இறுதி இருப்பு | 2,200 | 6,900 | | |

**17. சென்னை டென்னிஸ் மன்றத்தின் விளையாட்டுப் போட்டி நிதி ஏப்ரல் 1, 2018 அன்று ₹24,000 வரவிருப்பு காட்டியது. அந்த ஆண்டில் அந்நிதியிலிருந்து பெற்ற வரவுகள் ₹26,000. அந்த ஆண்டில் மேற்கொண்ட விளையாட்டுப் போட்டிச் செலவுகள் 33,000. இவ்விவரங்கள் மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.**

தீர்வு :

**2019, மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| விளையாட்டுப் போட்டி நிதி | 24,000 | | | |
| **கூட்டுக :** நிதியிலிருந்து பெற்ற வரவுகள் | 26,000 | | | |
| | 50,000 | | | |
| **கழிக்க :** விளையாட்டுப் போட்டி செலவுகள் | 33,000 | 17,000 | | |

www.surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



18. காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் பின்வருவன எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 |
| தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 60,000 |

**தீர்வு :**

### காரைக்குடி விளையாட்டு மன்றத்தின் 2019, மார்ச் 31ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| தொடர்விளையாட்டுப் போட்டி நிதி | 90,000 | | தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு | 90,000 |
| **கூட்டுக :** தொடர் விளையாட்டுப் போட்டி நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 9,000 | | | |
| **கூட்டுக :** தொடர் விளையாட்டுப் போட்டி நிதிக்கான நன்கொடை | 10,000 | | | |
| | 1,09,000 | | | |
| **கழிக்க :** தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 60,000 | 49,000 | | |

19. சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 30,000 | பரிசு நிதி | 10,000 |
| கணிப்பொறி | 25,000 | பரிசு நிதி முதலீடுகள் | 10,000 |
| 2018 - 2019 ஆம் ஆண்டில் சந்தா பெற வேண்டியது | 5,000 | கைரொக்கம் | 7,000 |
| 2019 - 20 ஆம் ஆண்டிற்காக முன்கூட்டிப் பெற்ற சந்தா | 8,000 | வங்கி ரொக்கம் | 21,000 |

**தீர்வு :**

### 2019, ஏப்ரல் 1ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|
| முதல் நிதி (இருப்புக்கட்டும் தொகை) | 80,000 | விளையாட்டு உபகரணங்கள் | 30,000 |
| சந்தா முன்கூட்டிப் பெற்றது | 8,000 | கணிப்பொறி | 25,000 |
| பரிசு நிதி | 10,000 | சந்தா பெற வேண்டியது | 5,000 |
| | | பரிசு நிதி முதலீடுகள் | 10,000 |
| | | கைரொக்கம் | 7,000 |
| | | வங்கி ரொக்கம் | 21,000 |
| | 98,000 | | 98,000 |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**20.** **இராமநாதபுரம் கிரிக்கெட் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.**

**2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய**
**பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | வாடகை | | 11,000 |
| கைரொக்கம் | 5,000 | | பொழுதுபோக்குச் செலவுகள் | | 11,200 |
| வங்கி ரொக்கம் | 10,000 | 15,000 | அறைகலன் | | 10,000 |
| சந்தா | | | விளையாட்டுப் பொருள்கள் வாங்கியது | | 13,000 |
| 2017 | 12,000 | | விளையாட்டு போட்டிச் செலவுகள் | | 12,000 |
| 2018 | 33,000 | | முதலீடு செய்தது | | 28,000 |
| 2019 | 16,000 | 61,000 | இருப்பு கீ/இ | | |
| நுழைவுக் கட்டணம் | | 6,000 | கைரொக்கம் | 1,300 | |
| பொது நன்கொடைகள் | | 7,000 | வங்கி ரொக்கம் | 4,000 | 5,300 |
| பழைய விளையாட்டுப் | | | | | |
| பொருள்கள் விற்றது | | 1,000 | | | |
| இதர வரவுகள் | | 500 | | | |
| | | 90,500 | | | 90,500 |

**கூடுதல் தகவல்கள் :**

(அ) 2018 ஜனவரி 1 அன்று முதல்நிதி ₹30,000.

(ஆ) விளையாட்டுப் பொருள்களின் தொடக்க இருப்பு ₹3,000 மற்றும் விளையாட்டுப் பொருள்களின் இறுதி இருப்பு ₹5,000.

**தீர்வு :**

**இராமநாதபுரம் கிரிக்கெட் மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31-ம் நாளோடு**
**முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | ₹ | வருமானம் | ₹ |
|---|---|---|---|---|
| வாடகை | | 11,000 | சந்தா | 33,000 |
| பொழுதுபோக்குச் செலவுகள் | | 11,200 | நுழைவுக் கட்டணம் | 6,000 |
| பயன்படுத்திய விளையாட்டுப் | | | | |
| பொருள்கள் : | | | பொது நன்கொடைகள் | 7,000 |
| | | | பழைய விளையாட்டுப் | |
| தொடக்க இருப்பு | 3,000 | | பொருள்கள் விற்றது | 1,000 |
| **கூட்டுக :** கொள்முதல் | 13,000 | | இதர வரவுகள் | 500 |
| | 16,000 | | | |
| **கழிக்க :** இறுதி இருப்பு | 5,000 | 11,000 | | |
| விளையாட்டு போட்டிச் செலவுகள் | | 12,000 | | |
| உபரி (செலவுகளைக் காட்டிலும் | | | | |
| மிகுதியான வருமானம்) | | 2,300 | | |
| | | 47,500 | | 47,500 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**2018, டிசம்பர் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் நிதி | 30,000 | | அறைகலன் | | 10,000 |
| **கூட்டுக :** செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) | 2,300 | 32,300 | முதலீடுகள் செய்தது | | 28,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | | 16,000 | கைரொக்கம் | 1,300 | |
| | | | வங்கி ரொக்கம் | 4,000 | 5,300 |
| | | | விளையாட்டுப் பொருள்களின் இறுதி இருப்பு | | 5,000 |
| | | 48,300 | | | 48,300 |

**21. ஏற்காடு இளைஞர் சங்கத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்யவும்.**

**2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய**
**பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ கைரொக்கம் | 9,600 | சம்பளம் | 14,000 |
| | | அலுவலகச் செலவுகள் | 7,200 |
| புத்தகம் வாங்குவதற்காக பெற்ற அரசு மானியம் | 10,000 | புத்தகங்கள் வாங்கியது | 15,000 |
| சந்தா | 24,800 | எழுதுபொருள்கள் வாங்கியது | 1,800 |
| சேர்க்கைக் கட்டணம் | 2,000 | செய்தித்தாள் வாங்கியது | 2,100 |
| பரிசுநிதி வரவுகள் | 6,000 | பரிசுகள் வழங்கியது | 5,000 |
| வங்கி வட்டி | 1,500 | இருப்பு கீ/இ கைரொக்கம் | 9,900 |
| பழைய செய்தித்தாள்கள் விற்றது | 1,100 | | |
| | 55,000 | | 55,000 |

**கூடுதல் தகவல்கள் :**

(i) தொடக்க முதல் நிதி ₹20,000

(ii) புத்தகங்கள் இருப்பு (1.4.2018) ₹9,200

(iii) கூடியுள்ள சந்தா பெறப்படாதது ₹1,700

(iv) 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு ₹1,200 மற்றும் 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு ₹2,000.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



தீர்வு :

**ஏற்காடு இளைஞர் சங்கத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு**

ப வ

| செலவுகள் | ₹ | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| சம்பளம் | | 14,000 | புத்தகம் வாங்குவதற்காக பெற்ற அரசு மானியம் | | 10,000 |
| அலுவலகச் செலவுகள் | | 7,200 | சந்தா | 24,800 | |
| எழுதுபொருள்கள் வாங்கியது | 1,800 | | **கூட்டுக :** சந்தா பெற வேண்டியது | 1,700 | 26,500 |
| **கூட்டுக :** தொடக்க இருப்பு | 1,200 | | சேர்க்கைக் கட்டணம் | | 2,000 |
| | 3,000 | | வங்கி வட்டி | | 1,500 |
| **கழிக்க :** இறுதி இருப்பு | 2,000 | 1,000 | பழைய செய்தித்தாள்கள் விற்றது | | 1,100 |
| செய்தித்தாள் வாங்கியது | | 2,100 | | | |
| பரிசுகள் வழங்கியது | | 5,000 | | | |
| உபரி (செலவுகளைக்காட்டிலும் மிகுதியான வருமானம்) | | 11,800 | | | |
| | | 41,100 | | | 41,100 |

**2019, மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் நிதி | 20,000 | | புத்தகங்கள் வாங்கியது | 15,000 | |
| **கூட்டுக :** செலவுகளைக்காட்டிலும் மிகுதியான வருமானம் (உபரி) | 11,800 | 31,800 | **கூட்டுக :** தொடக்க இருப்பு | 9,200 | 24,200 |
| பரிசு நிதி வரவுகள் | | 6,000 | கைரொக்கம் | | 9,900 |
| | | | எழுதுபொருள்கள் இருப்பு | | 2,000 |
| | | | சந்தா பெறப்படாதது | | 1,700 |
| | | 37,800 | | | 37,800 |

**22. நெய்வேலி அறிவியல் சங்கத்தின் 2018, டிசம்பர் 31–ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.**

**2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு**

ப வ

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | இருப்பு கீ/கொ | | |
| கைரொக்கம் | 2,400 | வங்கி மேல்வரைப்பற்று | | 1,000 |
| சந்தா | 8,700 | தபால் செலவுகள் | | 200 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 5,000 | அறிவியல் உபகரணங்கள் வாங்கியது | | 10,000 |
| கண்காட்சி நிதி வரவுகள் | 7,000 | ஆய்வகச் செலவுகள் | | 2,400 |
| அறிவியல் உபகரணங்கள் விற்றது | 6,000 | செயலாளருக்கான மதிப்பூதியம் | | 5,000 |
| (ஏட்டு மதிப்பு ₹5,000) | | தணிக்கைக் கட்டணம் | | 3,600 |
| இதர வரவுகள் | 500 | பொதுச் செலவுகள் | | 1,800 |
| | | கண்காட்சி செலவுகள் | | 5,000 |
| | | இருப்பு கீ/இ | | |
| | | கையிருப்பு ரொக்கம் | 200 | |
| | | வங்கி ரொக்கம் | 400 | 600 |
| | 29,600 | | | 29,600 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**கூடுதல் தகவல்கள் :**

(i) தொடக்க முதல் நிதி ₹6,400

(ii) சந்தா தொகையில் 2019ஆம் ஆண்டிற்குரிய சந்தா ₹600 உள்ளடங்கியுள்ளது.

(iii) 1.1.2018 அன்று அறிவியல் உபகரணங்கள் இருப்பு ₹5,000.

(iv) கண்காட்சியின் உபரித்தொகை புதிய கலையரங்கத்திற்கான ஒதுக்காக உருவாக்கப்பட வேண்டும்.

2018, டிசம்பர், 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

**தீர்வு :**

### நெய்வேலி அறிவியல் சங்கத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் - 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

ப வ

| செலவுகள் | ₹ | வருமானம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|
| தபால் செலவுகள் | 200 | சந்தா | 8,700 | |
| ஆய்வகச் செலவுகள் | 2,400 | **கழிக்க :** முன்கூட்டி செலுத்தியது | 600 | 8,100 |
| செயலாளருக்கான மதிப்பூதியம் | 5,000 | அறிவியல் உபகரணங்கள் விற்றதில் இலாபம் | | 1,000 |
| தணிக்கைக் கட்டணம் | 3,600 | இதர வரவுகள் | | 500 |
| பொதுச் செலவுகள் | 1,800 | கண்காட்சி நிதி வரவுகள் | 7,000 | |
| | | **கழிக்க :** கண்காட்சி செலவுகள் | 5,000 | 2,000 |
| | | வருமானத்தைக்காட்டிலும் மிகுதியானச் செலவுகள் (பற்றாக்குறை) | | 1,400 |
| | 13,000 | | | 13,000 |

### 2018, டிசம்பர் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் நிதி | 6,400 | | கையிருப்பு ரொக்கம் | 200 | |
| **கழிக்க :** வருமானத்தைக்காட்டிலும் மிகுதியானச் செலவுகள் (பற்றாக்குறை) | 1,400 | 5,000 | வங்கி ரொக்கம் | 400 | 600 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 5,000 | அறிவியல் உபகரணங்கள் வாங்கியது | | 10,000 |
| முன்கூட்டிச் செலுத்திய சந்தா | | 600 | | | |
| | | 10,600 | | | 10,600 |

